பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 08 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவும் - ஃபிஜி-யும் ஜனநாயக அடிப்படையில் ஒரே மாதிரியான சித்தாந்தங்களை கொண்டவை என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பங்களாதேஷ் நிலவரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று மாலை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உரையாற்றுகிறார்.

3. நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் இடதுசாரி பயங்கரவாதம் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் காலை உணவுத் திட்டத்தால் மாணவர்கள் மட்டுமின்றி கல்வித்துறையும் வளர்ச்சி கண்டுள்ளதாக மாநில திட்டக்குழு கூட்டத்தில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் **Steeplechase** பிரிவில் இந்திய வீரர் **Avinash Sable** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---- இனி விரிவான செய்திகள் --

**<<<<<<>>>>>**

இந்தியாவும் - ஃபிஜி-யும் ஜனநாயக அடிப்படையில் ஒரே மாதிரியான சித்தாந்தங்களை கொண்டவை என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஃபிஜி சென்றுள்ள குடியரசுத் தலைவர் இன்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

ஃபிஜி நாட்டு மக்கள் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம் தொடர்பான திட்டங்களில் ஃபிஜி நாட்டுடன் இணைந்து பணியாற்றுவதில் இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இருநாட்டு மக்களின் பரஸ்பரம் நலன்களை மேம்படுத்தும் வகையில் அந்நாட்டுடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராக இருப்பதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக, ஃபிஜி நாடாளுமன்ற வளாகத்தில் அவருக்கு அந்நாட்டின் பாரம்பரிய முறையில் ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இதையடுத்து நடைபெற்ற நிகழ்ச்சியில், திருமதி திரெளபதி முர்மு-வுக்கு அந்நாட்டின் உயரிய விருதினை அந்நாட்டு அதிபர் திரு. **Ratu Wiliame** வழங்கினார்.

முன்னதாக, அந்நாட்டு பிரதமர் திரு **Sitiveni Rabuka**–வை அவர் சந்தித்து பேசினார்.

தலைநகர் **Suva**-வில் இந்தியாவின் சார்பில் கட்டப்படவுள்ள 100 படுக்கைகள் கொண்ட சிறப்பு பன்னோக்கு மருத்துவமனைக்கான திட்ட ஆவணங்களை அவர் இன்று வழங்கினார்.

தனது **Fiji** பயணத்தை முடித்துக் கொண்டு, திருமதி. திரௌபதி முர்மு நாளை நியூஸிலாந்து செல்கிறார்.

**<<<<<<>>>>>**

பங்களாதேஷ் நிலவரம் தொடர்பாக புதுதில்லியில் இன்று அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பங்களாதேஷில் நிலவிவரும் சூழல் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த இக்கட்டான நேரத்தில் எதிர்க்கட்சிகள் அனைவரும் அரசுடன் ஒத்துழைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து உறுப்பினர்களிடம் அவர் எடுத்துரைத்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று மாலை டாக்டர் ஜெய்சங்கர் உரையாற்றுகிறார்.

இந்த கூட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, மத்திய அமைச்சர்கள் திரு ஹெச் டி குமாரசாமி, திரு ராம்மோகன் நாயுடு, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி, திமுக சார்பில் திரு டி ஆர் பாலு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த தலைவர்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

இதனிடையே, பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தற்காலிக அரசு அமைக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு முகமது ஷஹாபுதின் கூறியுள்ளார்.

தற்காலிக அரசு அமைக்கப்பட்டபின்னர் தேர்தல் நடத்துவதற்கான வழிவகை செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் காலிதா ஸியா விடுவிக்கப்படுவார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள பங்களாதேஷ் தூதரகத்திற்குள் போராட்டக்காரர்கள் அமளியில் ஈடுபட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இதற்கிடையே, பங்களாதேஷில் ராணுவம் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து செயலாற்றி அங்கு மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அந்நாட்டின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு ஐ நா மதிப்பளிக்கிறது என்றும் அந்நாட்டு மக்களுக்கு ஐ நா துணை நிற்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது என்று அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பங்களாதேஷில் கடந்த சில வாரங்களாக நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து ஐ நா விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு டேவிட் லாமி, பங்களாதேஷில் விரைவில் அமைதியான சூழல் ஏற்பட வேண்டும் என்று பிரிட்டன் விரும்புவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் இருந்து அந்நாட்டு பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா வெளியேறிய நிலையில், இந்தியா – பங்களாதேஷ் எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லைப்பகுதிகளில் நிலவிவரும் சூழல் குறித்து எல்லை பாதுகாப்புப்படை தலைவர் திரு தல்ஜீத் சிங் சௌத்ரி இன்று இரண்டாவது நாளாக ஆய்வு மேற்கொண்டார்.

மேற்குவங்க மாநில எல்லைப்பகுதியை ஒட்டியுள்ள மாவட்டங்களில் ஊடுருவல்களை தடுக்கும் வகையில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எல்லை பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் இடதுசாரி பயங்கரவாதம் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது பதிலளித்து பேசிய மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், கடந்த பத்தாண்டுகளில் இடதுசாரி பயங்கரவாதம் தொடர்பாக பதிவான வழக்குகளின் எண்ணிக்கை 53 சதவீதம் குறைந்துள்ளதாக கூறினார்.

2004 முதல், 2014-ஆம் ஆண்டு வரை பதிவான வழக்குகளின் எண்ணிக்கையை காட்டிலும் தற்போது குறைவாகவே வழக்குகள் பதிவானதாக அவர் குறிப்பிட்டார்.

2013-ஆம் ஆண்டு இடதுசாரி பயங்கரவாதத்தால் 126 மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகி இருந்ததாகவும், தற்போது அந்த எண்ணிக்கை 38-ஆக குறைந்துள்ளதாகவும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

காலை உணவுத் திட்டத்தால் மாணவர்கள் மட்டுமின்றி கல்வித்துறையும் வளர்ச்சி கண்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற மாநில திட்டக்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாநில திட்டக்குழு அரசுக்கு வழிகாட்டும் விதமாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

இக்கூட்டத்தில், மாநில அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறித்தும், திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவுக்கொள்கைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>

கோவை மாவட்டம் சூளுர் விமானப்படை தளத்தில் தரங்க் சக்தி எனப்படும் சர்வதேச விமான பயிற்சி இன்று முதல், வரும் 14-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

சுமார் 30 நாடுகள் பங்கேற்கும் இந்த பயிற்சியில் நவீன ரக போர் விமானங்கள் சாகசங்களை மேற்கொள்கின்றன.

முதல்கட்டமாக கோவை சூளுரில் நடைபெறும் இந்த பயிற்சி முடிந்த பின்னர், இரண்டாம் கட்டமாக இம்மாதம் 29-ஆம் தேதி முதல், செப்டம்பர் 14-ஆம் தேதிவரை ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள விமானப்படை தளத்தில் நடைபெறும்.

அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளின் விமானங்களும், இந்தியாவின் தேஜஸ், ரஃபேல், மிராஜ், எம் ஐ மற்றும் ஜாகுவார் ரக விமானங்களும் இந்த பயிற்சியில் பங்கேற்கும் என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<<<>>>>>

பீம்ஸ்டெக் வர்த்தக மாநாடு இன்று புதுதில்லியில தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தொடங்கிவைக்கிறார்.

மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல், பீம்ஸ்டெக் உறுப்பு நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள், அரசு உயரதிகாரிகள், தொழில்துறை நிபுணர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

வங்கக்கடல் பகுதியில் உள்ள நாடுகளுக்கு இடையே வர்த்தக ஒத்துழைப்பு, ஆற்றல் பாதுகாப்பு, நிலையான வளர்ச்சியை உருவாக்கும் வகையில் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட சோன்பிரயாக் பகுதியில் மீட்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதுவரை அங்கு 17 பேர் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்ததாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களை ஹெலிகாப்டர் மூலம் மீட்புப் படையினர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த மீட்பு நடவடிக்கைகளில் விமானப்படையினர் இன்று இணைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கேதார்நாத்தில் மோசமான வானிலை காரணமாக மீட்பு நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதாகவும், இருப்பினும், மீட்புப்படையினர் துரிதமாக செயல்பட்டு வருவதாகவும் அம்மாநில பேரிடர் மீட்புப்படை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்காவிடமிருந்து மூன்று புள்ளி ஒன்பது பில்லியன் டாலர் நிதியுதவியை பெற்றிருப்பதாக யுக்ரைன் தெரிவித்துள்ளது.

சமூக மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான செலவினங்களுக்கு இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும் என்று அந்நாட்டு நிதியமைச்சர் திரு **Sergii Marchenko** தெரிவித்துள்ளார்.

கடனாக அல்லாமல் யுக்ரைனுக்கு உதவும் விதமாக அமெரிக்கா இத்தொகையை வழங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அந்நாட்டில் உள்ள அரசுப்பணியாளர்கள், குறைவான வருவாய் ஈட்டுவோர், மாற்றுத்திறனாளிகளுக்கு நிதி அளிக்க இது பயன்படுத்தப்படும் என்றும் திரு **Sergii Marchenko** குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் **Steeplechase** பிரிவில் இந்திய வீரர் **Avinash Sable** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

ஈட்டி எறிதல் பிரிவில் நீரஜ் சோப்ரா, கிஷோர் குமார் **Jena** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கிரண் பஹல் பங்கேற்கிறார்.

மகளிர் குத்துச்சண்டை 50 கிலோ எடைப்பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் வினேஷ் போஹத், ஜப்பானின் **Susaki Yui-**யை எதிர்கொள்கிறார்.

ஆடவர் டேபிள் டென்னிஸ் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா-சீனாவை எதிர்கொள்கிறது.

---------

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா இன்று ஜெர்மனியின் கேத்தலின் **Kanev**–ஐ எதிர்கொள்கிறார்.

**<<<<<<>>>>>**